## தொடர் தோல்வியின் நாயகர் – எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி – விவசாயிகள் மீது திடீர் அக்கறை கொண்டு ஆதாரமில்லாத அறிக்கை!

# குறுவைப் பருவத்திற்கான விவசாயிகள் பயிர்க் காப்பீட்டுப் பதிவு – ஜூன் 24-ல் தொடங்குகிறது!

## வேளாண் – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விளக்கம்!

**சென்னை, ஜூன் 19–**

**தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், நேற்று முன்தினம் மாலை ஆதாரங்களுடன் விடுத்த அறிக்கை ஒன்றில், “தொடர் தோல்வியின் நாயகரான – எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி திடீரென்று விவசாயிகள் மீது அக்கறை கொண்டு யாரோ எழுதிக் கொடுத்த அறிக்கை ஒன்றினை அப்படியே வெளியிட்டுள்ளார்” என்றும் – “வரும் ஜூன் 24–ஆம் தேதி முதல், குறுவைப் பருவத்திற்கான விவசாயிகள் பதிவு, தேசிய பயிர்க் காப்பீட்டு இணைய தளத்தில் மேற்கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது” என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

**தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவரின் அறிக்கைக்கு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் விடுத்துள்ள மறுப்புச் செய்தி வருமாறு:-**

16.06.2024 அன்று தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் டெல்டா விவசாயிகளின் குறுவைத் தொகுப்பு அறிவிப்பு மக்களை ஏமாற்றும் நாடகங்களில் ஒன்று எனவும் அதை வன்மையாக கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளார். உண்மைகளை மறைத்து யாரோ எழுதிகொடுப்பதை கையெழுத்திட்டு அறிக்கையாக வெளியிடும் எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு பின்வரும் விவரங்களை தெரிவிக்க விரும்புகிறேன்.

நீர்ப்பற்றாக்குறை பாசன ஆண்டான 2023-24-ல் தமிழ்நாடு அரசு எடுத்த தொடர் நடவடிக்கைகளால் 84.4 டி.எம்.சி. நீர் பெறப்பட்டதுடன். இவ்வாண்டின் ஆரம்பத்தில் மேட்டூர் அணையிலிருந்து கிடைக்கப்பெற்ற 69.25 டி.எம்.சி. நீர் முறை பாசனம் மூலம் பங்கீடு செய்ததன் பலனாக, அனுமதிக்கப்பட்ட 17 இலட்சம் ஏக்கருக்கு, 15.99 இலட்சம் ஏக்கரில் பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. மேலும், குடிநீர் மற்றும் சுற்றுச்சூழல் தேவைகளுக்காக மேட்டூர் அணையின் நீர் இருப்பை சேமித்து 11.10.2023 முதல் 31.05.2024 வரை சுமார் 18 டி.எம்.சி. நீரினை குடிநீர் தேவைக்காக தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. 14.06.2024 அன்று 2024-25ஆம் பாசன ஆண்டுக்கான, முதல் காவிரி நீர் முறைபடுத்தும் குழுவின் (CWRC) கூட்டத்தில் நமக்குரிய நீரினை வழங்க வலியுறுத்தப்பட்டுள்ளது. இக்குழுவின் அடுத்த கூட்டம் இம்மாத இறுதியில் நடைபெறும் போது தமிழ்நாட்டிற்குரிய நீர் பங்கினை உடன் வழங்கிட மென்மேலும் வலியுறுத்தப்படும்.

கடந்த அ.தி.மு.க. பத்தாண்டு ஆட்சியின் போது ஒன்றரை இலட்சம் மின் இணைப்பு மட்டுமே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. ஆனால் இவ்வரசு பொறுப்பேற்று மூன்றாண்டுகளுக்குள் 1.69 இலட்சம் விவசாயிகளுக்கு கூடுதலாக மின் இணைப்பு வழங்கப்பட்டு அதனால் சாகுபடி பரப்பும் கணிசமாக உயர்ந்துள்ளது. அதன் மூலம், 3.39 இலட்சம் பாசன பரப்பு விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், 4.8 இலட்சம் மெட்ரிக் டன் விவசாய விளைபொருட்கள் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது விவசாயிகளின் துயர் துடைப்பதில் இவ்வரசு எவ்வளவு அக்கறை செலுத்துகிறது என்பது கண்கூடாக தெரிகிறது. இதனை தெரிந்து கொள்ளாமல் எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் உண்மைக்கு புறம்பாக அறிக்கையினை வெளியிடுவதையே தொடர்ந்து வழக்கமாக கொண்டுள்ளார்.



கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் மழை இல்லாத காலங்களில் குறுவை தொகுப்பானது எந்த அளவுகோலை பின்பற்றி விவசாயிகளின் தேவைக்கு வழங்கப்பட்டதோ, அதைவிட கூடுதலாக, சிறப்பாக இவ்வரசால் 16 மணிநேரம் மும்முனை மின்சாரமும், 1 இலட்சம் ஏக்கருக்கான 2,000 மெட்ரிக் டன் நெல் விதைகளும், தற்பொழுது கூடுதலாக வழங்கப்படுகிறது.

சமீபத்தில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு இடத்தில் கூட வெற்றி பெற இயலாத **தொடர் தோல்வியின் நாயகரான எதிர்க்கட்சி தலைவர்** அவர்கள் திடீரென்று விவசாயிகளின் மீது அக்கறை கொண்டு அறிக்கை ஒன்றினை யாரோ எழுதிக் கொடுத்ததை அப்படியே வெளியிட்டுள்ளார். முந்தைய ஒன்றிய அரசினால் நிறைவேற்றப்பட்ட 3 வேளாண் சட்டங்களை தூக்கிபிடித்து பல விவசாயிகள் தொடர்ந்து போராடி மடிந்தனர் என்பது இவருக்கு நினைவிருக்கிறதா என்று தெரியவில்லை. ஒவ்வொரு முறை அறிக்கை வெளியிடும்போதும் தன்னுடைய ஆட்சி காலத்தில் நடந்தேறிய அவலங்களை கருத்தில் கொள்ளாமல் உண்மைக்கு புறம்பாக தானும் குழம்பி நாட்டுமக்களை குழப்புவதையே தொடர்ந்து செய்து கொண்டுள்ளார்.

ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் வசதி உள்ள விவசாயிகள் மூலம் சமூக நாற்றங்கால் முறையில் அரசு உதவியோடு நாற்றங்கால் வளர்க்கப்பட்டு ஒரு மாதத்திற்கு பிறகு தண்ணீர் கிடைக்கும் போது விவசாயிகள் பிரச்சனையின்றி நெல் பயிர் செய்வதற்கு மானிய விலையில் நாற்றங்கால் வழங்கப்பட்டது என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். சமூக நாற்றங்கால் முறை திட்டமானது முழுமையான தோல்வி கண்ட திட்டம் ஆகும். தற்பொழுது விவசாயிகள் ஆழ்துளை குழாய் கிணறு மூலம் பெறப்படும் நீரைக்கொண்டு நேரடி நெல் விதைப்பு செய்யும் முறை மூலம் விவசாயிகள் அதிக பலனை பெறுவதால் தொடர்ந்து அது போன்று விவசாய முறை மூலம் தான் நெல் பயிரிடப்பட்டு வருகிறது.

மூன்றாண்டுகளில் டெல்டா மாவட்டங்களில் இயற்கை இடர்ப்பாடுகள் மூலம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பேரிடர் நிவாரண நிதி மூலம் ரூபாய் 270 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. அதேபோல தமிழ்நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் இயற்கை இடர்ப்பாடுகளால் பாதிக்கப்பட்ட பொழுது அவர்களின் நலன் கருதி இது வரை பேரிடர் நிவாரணநிதியாக ரூபாய் 833 கோடியே 87 லட்சம் கழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து விவசாயிகளின் நலன் காத்திட இவ்வரசு பல்வேறு நலத்திட்டங்களை விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு தனி வேளாண் நிதிநிலை அறிக்கையிலும் மற்றும் மானிய கோரிக்கையின் போதும் பல்வேறு அறிவிப்புகளை செய்து அதன் பலன் விவசாயிகளுக்கு நேரடியாக கிடைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறுவை தொகுப்பு அறிவிப்பினை நாடகம் என சொல்லும் எதிர்க்கட்சித் தலைவர், தனது ஆட்சியில் அறிவித்துவிட்டு செயல் படுத்தாமல் போன திட்டங்களின் எண்ணிக்கை எண்ணில் அடங்காது.

தமிழ்நாடு முழுவதும் நீர்நிலைகளை தூர்வாரியும், புனரமைத்தும், சீரமைத்தும், புதிய நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை ஏற்படுத்தியும் மழை நீரை வீணாக்காமல் சேமித்து நிலத்தடி நீரை செறி ஊட்டியதால் நுண்ணீர் பாசனம் போன்ற தொழில்நுட்பங்களை பரவலாக்கி பாசன நீரின் பயன்பாட்டினை அதிகரித்ததால் 2020-21 ஆம் ஆண்டில் 89 இலட்சம் ஏக்கராக இருந்த பாசனபயிர் பரப்பு கடந்த 2022-23 ஆம் ஆண்டில் 95 இலட்சத்து 39 ஆயிரம் ஏக்கராக உயர்ந்துள்ளது.

தற்பொழுது, 16 மணி நேரம் வரை மும்முனை மின்சாரம் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருவதன் மூலம், குறுவை சாகுபடி நெற்பயிர் பரப்பு கடந்த ஆட்சிகாலத்தில் இருந்ததை விட ஒன்றரை இலட்சம் ஏக்கர் அதிகரித்துள்ளது. மேலும், 2020-21ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி 108 இலட்சம் மெட்ரிக் டன் ஆக இருந்த நிலையில், இவ்வரசு செயல்படுத்திய பல்வேறு சிறப்பு முயற்சிகள், உத்திகள், சிறப்பு திட்டங்கள் போன்றவைகளால் உணவு தானிய உற்பத்தி 2023-24ஆம் ஆண்டில் 118 இலட்சம் மெட்ரிக் டன் அளவில் உயர்ந்துள்ளது இவ்வரசின் இமாலய சாதனையாகும்.

இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு, ஒவ்வொரு ஆண்டும் குறுவை தொகுப்பு திட்டத்தை அறிவித்து வருகிறது. **2021-22** ஆம் ஆண்டில், ரூபாய். **69.06** கோடியும், **2022-23** ஆம் ஆண்டில், ரூபாய் **61.12** கோடியும், **2023-24** ஆம் ஆண்டில், ரூபாய். **75.95** கோடியும் வழங்கியுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்தை செயல்படுத்தியதன் வாயிலாக **9,46,442** இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். குறுவை தொகுப்புத்திட்டம் கடந்த 3 வருடங்களாக செயல்படுத்தியதன் பயனாக கடந்த ஆட்சிக்காலத்தில் சாகுபடி செய்யப்பட்ட பரப்பளவை விட தற்பொழுது இவ்வரசு பொறுப்பேற்ற காலத்தில் 1.47 இலட்சம் ஏக்கர் பரப்பளவு கூடுதலாக சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும், இந்த கூடுதல் பரப்பின் மூலம் நெல் உற்பத்தி சுமார் 2 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு உயர்ந்துள்ளது. இது கழக அரசின் சாதனைகளின் ஒரு மணிமகுடமாகும்.

மேலும், இந்த ஆண்டில் விவசாயிகள் எதிர்பாராத இயற்கை இடர்ப்பாடுகளால் ஏற்படும் பயிர் இழப்பில் இருந்து பாதுகாத்திட ரூ.1,775 கோடி நிதி ஒதுக்கீட்டில் பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்த வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் குறுவை பருவம் உட்பட சம்பா, நவரை மற்றும் கோடை பருவங்களிலும் இத்திட்டம் செயல்படுத்த ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் **வரும் ஜூன் 24ஆம் தேதி முதல் குறுவை பருவத்திற்கான விவசாயிகள் பதிவு தேசிய பயிர் காப்பீட்டு இணையதளத்தில் மேற்கொள்ள அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி, அனைத்து நடவடிக்கைகளும் சிறப்பாக இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்வதுடன். அ.தி.மு.க. ஆட்சியில் விடியாமல் இருந்த விவசாயிகளின் வாழ்க்கைத் தரம், வேளாண்மைக்கு என்று தனி நிதி நிலை அறிக்கையின் மூலம், தமிழக விவசாயிகள் விடியலை நோக்கி சென்று கொண்டிருக்கிறார்கள் என்பது தான் உண்மை. இந்த உண்மையை கூடிய விரைவில் எதிர்க்கட்சித் தலைவருக்கு புரிந்துவிடும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தமது அறிக்கையில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் குறிப்பிட்டுள்ளார்.

---

### வாக்குச்சாவடியைக் கைப்பற்றும் கலாச்சாரத்தைத் தொடங்கியதே ஜெயலலிதா ஆட்சியில்தான்!

## விக்கிரவாண்டியில் டெபாசிட் பறிபோகும் அச்சத்தால் இடைத்தேர்தலைப் புறக்கணித்துள்ளது அ.தி.மு.க.!

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

**சென்னை, ஜூன் 19–**

**சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி நேற்று முன்தினம் நிருபர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு :–**

*தமிழ்நாட்டில் வாக்குச்சாவடியை கைப்பற்றும் கலாச்சாரம் தொடங்கியதே அ.தி.மு.க.தான். ஜெயலலிதா ஆட்சியில்தான் இது நடந்தது. நானே பாதிக்கப்பட்டேன். அதில் வேடிக்கை என்னவென்றால் 2,000 ஓட்டுகள் இருந்த இடத்தில் 2,300 ஓட்டுகள் போட்டார்கள்.*

*பாண்டியன் என்ற தேர்தல் அதிகாரியிடம் நான் புகார் கொடுத்தபோது, “எவ்வளவு ஓட்டு இருந்தது - எவ்வளவு ஓட்டு பதிவாகியிருக்கிறது. இந்த கணக்கை மட்டும் எடுங்கள்” என்றேன். அவர் கணக்கை எடுத்தார். கிட்டத்தட்ட ஆலந்தூர் நகராட்சிக்கு உட்பட்ட 20 பூத்களில் 2,000 ஓட்டுகளுக்கு 2,300, 2,200 என்று பதிவானது.*

*காரணம் என்னவென்றால், அதிகமான பேலட் பேப்பர் கொண்டு வருவார்கள். அதையும் கைப்பற்றி குத்தி, குத்தி ஓட்டு போட்டார்கள். இதை எல்லாம் செய்தது அ.தி.மு.க. என்பதை மக்கள் மறக்க மாட்டார்கள்.*

*தேர்தல் கமிஷன் அவர்களிடம் உள்ளது. மாநில அரசிடம் இல்லை. இந்தியா முழுவதும் தேர்தல் கமிஷன் யாருடைய கையில் இருக்கிறது என்பது தெரியும். அந்த தேர்தல் கமிஷன் இருக்கும் போது ஏன் பயப்படுகிறார்கள்.*



*மக்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டில்தான் எந்த கலவரமும் இல்லாமல் அமைதியாக வாக்குப்பதிவு நடந்து ஜனநாயகம் காப்பாற்றப்பட்டது. இந்த மக்களவை தேர்தலில் அ.தி.மு.க.வுக்கு நிறைய இடங்களில் டெபாசிட் போனது. விக்கிரவாண்டி தேர்தலிலும் டெபாசிட் போய் விடுமோ என்ற பயம். சசிகலா, கட்சியை இணைக்கப் போகிறேன் என்று அறிக்கை விட்டுள்ளார். இந்த சூழ்நிலையில் இந்த தேர்தலை எடப்பாடி புறக்கணித்து விட்டார்.*

*தேர்தல் புறக்கணிப்பு என்றால் கட்சியில் உள்ள யாரும் ஓட்டு போடக்கூடாது. நாங்களும் ஒரு கணக்கு எடுக்கப் போகிறோம். அ.தி.மு.க.வினர் ஓட்டு போட்டார்களா என்று. அவர்கள் ஓட்டு போட்டு இருந்தால் அவர்கள் எடப்பாடியைப் புறக்கணித்து விட்டார்கள் என்று அர்த்தம்.*

*தேர்தலைப் புறக்கணிக்கிறோம் என்று சொல்லியதை மீறி யாராவது ஓட்டு போட்டால் கட்சியை விட்டு நீக்கிவிடுவேன் என்று சொல்லத் தயாரா? சொல்ல மாட்டார்கள். ஏதோ அவர்கள் மறைமுக ஒப்பந்தம் வைக்கலாம் என்று பார்க்கிறார்கள். எதையும் சந்திக்கின்ற ஆற்றல் எங்களுக்கு இருக்கிறது.*

*வன்னிய பெருமக்களுக்கு கலைஞர், மு.க.ஸ்டாலின் செய்ததைப்போல யாரும் செய்யவில்லை என்பது அவர்கள் எல்லாருக்கும் தெரியும். 20 சதவிகிதம் இடஒதுக்கீட்டை கொடுத்ததே எங்கள் தலைவர் தான். அதன் மூலமாக எத்தனை பேர் டாக்டர், இன்ஜினீயர் ஆனார்கள். எத்தனை பேர் குரூப் 1 சர்வீசில் ஐ.ஏ.எஸ். ஆனார்கள். இதை எல்லாம் அந்த மக்கள் மறந்து விடுவார்களா என்ன?*

*ஒன்றை மட்டும் சொல்கிறேன். முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மாதம் தோறும் மகளிர் உரிமைத் தொகை ரூ.1000 கொடுத்த தன் விளைவு, அந்த தாய்மார்கள் எப்படி நன்றியுணர்வோடு வாக்களித்து வெற்றி பெற செய்தார்களோ, அதைப்போல, 20 சதவிகிதம் இடஒதுக்கீட்டால்தான் நாம் இவ்வளவு வளர்ச்சி பெற்றோம் என்பதை உணர்ந்து, ஆயிரம் ராம்தாஸ்கள் சொன்னாலும் மனசாட்சியுள்ளவர்கள், நல்லவர்கள், இதயம் படைத்தவர்கள், வன்னியர்கள் அத்தனை பேரும் தி.மு.க. கூட்டணிக்கு தான் வாக்களிப்பார்கள்.*

*மக்களவை தேர்தலில் பா.ம.க.வை மக்கள் கைக்கழுவி விட்டார்கள். அவர்கள் சின்னமே இப்போது போய் விட்டது. சென்ற தேர்தலில் ஒரு சின்னத்திற்கு ஓட்டு கேட்டு, இந்த இடைத்தேர்தலில் இன்னொரு சின்னத்திற்கு ஓட்டு கேட்டால் அந்த ஊரில் உள்ளவர்கள் மதிப்பார்களா? எங்களுக்கு அப்படி இல்லை. நாங்கள் நிச்சயமாக வெற்றி பெறுவோம்.*

*இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி கூறினார்.*

---

## ‘அரசு ஆர்ட்ஸ்’ சுந்தரேசன் ஆறாம் ஆண்டு நினைவு நாள்!

*சென்னை, ஜூன் 19 -*

*‘அரசு ஆர்ட்ஸ்’ சுந்தரேசன் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் இன்று (19.6.2024 புதன்கிழமை) கடைப்பிடிக்கப்படுகிறது.*



*முரசொலி பொங்கல் மலர் மற்றும் தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் மலர்களை தன் கை வண்ணத்தால் அழகுற வடிவமைத்தவரும் தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் மற்றும் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அன்பை பெற்றவருமான ‘அரசு ஆர்ட்ஸ்’ நிர்வாக இயக்குநர் ‘அரசு ஆர்ட்ஸ்’ சுந்தரேசன் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் இன்று (19.6.2024 புதன் கிழமை) கடைப்பிடிக்கப் படுகிறது.*

*இந்நிகழ்ச்சி ‘அரசு ஆர்ட்ஸ்’ எண்.78, சீனிவாச பெருமாள் சன்னதி முதல் தெரு, இராயப் பேட்டை, சென்னை 14, (புதுக்கல்லூரி பின்புறம்) எனும் முகவரியில் நடைபெறுகிறது.*

---

### ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தலைமையில்

## கோவை மேற்கு மண்டல ஆதி திராவிடர் நலக் குழுக் கூட்டம்!

### வி.பி.இராசன் – திப்பம்பட்டி ஆறுசாமி – மாரியப்பன் கென்னடி – என்.என்.செந்தில் குமார் சிறப்புரை!

*கோவை, ஜூன் 19 -*

*கோவை மேற்கு மண்டல ஆதி திராவிடர் நலக் குழு கூட்டம் சட்டமன்ற உறுப்பினர் மாநில செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது அனைவரையும் மாவட்ட அமைப்பாளர் சென்னை சிவா வரவேற்றார் கூட்டத்தில் மாநில இணைச் செயலாளர்கள் வி.பி.ராஜன் திப்பம்பட்டி ஆறுச்சாமி துணை செயலாளர் பொன் தோஸ் மாரியப்பன் கென்னடி மாவட்டத் துணைச் செயலாளர் எம்.என்.செந்தில்குமார் ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள்.*

*கூட்டத்தில் மாநகர் மாவட்ட அமைப்பாளர் டெம்போ சிவா, தெற்கு மாவட்ட அமைப்பாளர் கிணத்துக்கிடவு ஞானசேகரன், திருப்பூர் தெற்கு மாவட்ட அமைப்பாளர் கன்னிமுத்து, வடக்கு மாவட்ட அமைப்பாளர் பழனிச்சாமி, மாநகர் மாவட்ட அமைப்பாளர் துரைசாமி உள்ளிட்ட மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

*இக்கூட்டத்தில் ஒன்று தமிழகத்தில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கும் 40 இடங்களை வென்றெடுத்த தமிழக முதல்வர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களுக்கும் மாநில இளைஞர் அணி செயலாளர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வது எனவும்,*

*நடைபெற உள்ள விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் நமது அணியின் சார்பில் கிளை வாரியாக தேர்தல் பணிக்குழு அமைத்து கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவிற்கு பாடுபடுவது எனவும் நகர ஒன்றிய பேரூர் கழகங்களுக்கு தலைமைக் கழகத்தின் அனுமதி பெற்று அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் நியமனம் செய்வது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் இக்கூட்டத்தில் கோவை பொள்ளாச்சி நீலகிரி திருப்பூர் ஆகிய நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட்ட கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு பணியாற்றிய நலக்குழு நிர்வாகிகளுக்கு பாராட்டு தெரிவித்துக் கொள்ளப்பட்டது.*

---

### திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்

## மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல்

# தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்ட அ.இராஜேந்திரன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால்; திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, ஜூன் 17 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். “ என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கு ஆர்.ராஜசேகர் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவராக,**

**திரு. ஆர்.ராஜசேகர்,** எண்.141, மணியகாரர்தெரு, ரெண்டேரிப்பட்டு கிராமம், போளூர் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம்-606 803.

அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18
நாள்- 17.06.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

### இராமேஸ்வரத்தில் விபத்தில் இறந்த

## மீனவர்களின் குடும்பத்திற்கு கழகத்தின் சார்பில் நிதியுதவி!

இராமேஸ்வரம், ஜூன் 19–

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் வட்டம், பாம்பன் அன்னை நகரைச் சேர்ந்த மீனவர்கள் பரக்கதுல்லா, ஆரோக்கியம் ஆகிய இருவரும் 15.06.2024 அன்று கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றபொழுது ஏற்பட்ட திடீர் விபத்தில் மரணமடைந்ததையொட்டி அவர்களின் குடும்பத்திற்கு கழக தலைவர் – முதல்வர் மு.க ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க நிவாரண உதவித்தொகை வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் இறந்த மீனவர்களின் இல்லத்திற்குச் சென்று அரசு வழங்கிய நிவாரணத் தொகையுடன் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ் கனி ஆகிய இருவரும் அவர்களது சொந்த நிதியிலிருந்தும் நிதி வழங்கினார்கள்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# மா.பா. சாரதி

### ஜூன் 19 (1976)



**வடாற்காடு மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவராகவும் – மாவட்ட அவைத்தலைவராகவும் பணிபுரிந்தவர்.**

**வேலூர் நகர்மன்றத்தில் இருபது ஆண்டு காலமாக உறுப்பினராகவும், மூன்று முறை நகராட்சித் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றியவர்.**

**தமிழக சட்டப்பேரவைக்கு இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பத்தாண்டு காலம் சட்டமன்றப் பணிகளை செவ்வனே ஆற்றி, தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதி மக்களுக்காக பேரவையில் வாதாடி, குறைபாடுகளை நிவர்த்தி செய்தவர்.**

**“பெயரால், புகழால், வல்லமையால், செல்வாக்கால், உருவத்தால் யானையென அவர் இருந்தாலும், கழகத்தின் கட்டளையெனும் அங்குசத்துக்கு அடங்கியன்றோ பணி குவித்தார்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.**

## தலைமைக் கழகம்

### தி.மு.க.